**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை.**
**முன்னிலை: திரு.S. முகம்மது யூசுப் நவாஸ், B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை.**

**2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8 -ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**இடைக்கால மனு எண். 8/2025**
**இன்**
**அசல் வழக்கு எண். 53/2020**

ஆர். பிரிட்டோ இருதயராஜ் ...... மனுதார்/வாதி

/எதிர்/

1. பெனடிக்டா
2. ஜோஅருண்ராஜன் ......எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என்முன்பு 07.04.2025 இன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T. முத்துராமலிங்கம் அவர்கள் ஆஜராகியும், 1, 2ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.கணேசன் அவர்கள் ஆஜராகியும், எதிருரை தாக்கல் இல்லை என மேலொப்பம் செய்யப்பட்டுள்ளநிலையில், மனுதார் தரப்பு வாதம் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

**1.** மனுதாரர் தரப்பில் கட்டளை 6 ரூல். 16, 17 பிரிவு 151 உரிமையியல் விசாரணை சட்டத்தின்படி மனுவில் கண்ட விபரப்படி பிராதை சீர்திருத்தம் செய்து, சீர்திருத்த பிராது தாக்கல் செய்ய அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் என்று அபிடவிட் தாக்கல் செய்து இம்மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**2. மனு அபிடவிட்டின் சுருக்கம்:-**

வாதி தரப்பு சாட்சி விசாரணை செய்யவும், வழக்கை மேல்நடத்திடவும் வாதியின் மனைவி நிர்மலாவளன்அரசி என்பவரை வாதி தனது பவர்ஏஜெண்டாக நியமித்து மானாமதுரை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 29/24 என்ற எண்ணில் கடந்த 27.09.2024ம் தேதியில் பதிவு செய்யப்பட்ட பவர் என்னும் பொது அதிகார பத்திரத்தை பதிவு செய்து கொடுத்துள்ளதால் இ.ம.எண். 7/2024 என்ற

எண்ணில் பவர் அனுமதி கோரும் மனுவானது தாக்கல் செய்யப்பட்டு, அம்மனுவானது கடந்த 20.02.2025ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளநிலையில், அதைபொருத்து பிராதை சீர்திருத்தம் செய்ய அனுமதி வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் இல்லை என மேலொப்பம் செய்யப்பட்டுள்ளது.

**4. இம்மனுவில் தீர்க்க வேண்டிய பிரச்சனை: இம்மனு அனுமதிக்கத்தக்கதா/இல்லையா என்பதேயாகும்:-**

மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணம் ஏற்கத்தகுந்த நிலையில் உள்ளது. ஏற்கனவே இடையீட்டு மனு எண்.7/2024 அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் Consequential Amendment ஆன இம்மனுவை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

**மேற்கண்ட காரண காரியங்களின் அடிப்படையில் மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025-ம் ஆண்டு ஏப்ரல் 08 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.04.08 10:51:34 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.04.08 10:51:44 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை

**District Munsif Court**

**Manamadurai**

**IA.No. 8/2025**

**in**

**OS.No. 53/2020**

**<u>Order</u>**

**Dated 08.04.2025**